## February 9, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா, மலேசியா இடையே பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த 11 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

(i) வர்த்தகம் மற்றும் முதலீடுகளில் உள்ளூர் கரன்சி (ரூபாய், ரிங்கிட்) பயன்பாட்டை ஊக்குவிக்க இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

(ii) மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அந்தநாட்டு பிரதமர் அன்வர் இப்ராஹிம் இடையே நடைபெற்ற இருதரப்பு உயர்நிலைப் பேச்சுவார்த்தையில் இந்த முடிவுமேற்கொள்ளப்பட்டது.

வர்த்தகம்- முதலீடு, நவீன தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் போன்ற முன்னுரிமைத் துறைகளில் இருதரப்பு உறவை விரிவுபடுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது.

(iii) இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக மலேசியாவுக்கு வந்த பிரதமர் மோடி, தலைநகர் கோலாலம்பூரில் பிரதமர் அன்வர் இப்ராஹிமை சந்தித்துப் பேசினார். அப்போது, பாதுகாப்பு, கடல்சார் ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு, எண்மப் பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம், எரிசக்தி, வேளாண்மை, சுகாதாரம், கல்வி, கலாசாரம், சுற்றுலா, இருதரப்பு மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்பட பல்வேறு துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இருவரும் விரிவாக ஆலோசித்தனர். இருதரப்பு நலன்சார்ந்த பிராந்திய, சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

(iv) 11 ஒப்பந்தங்கள் கையொப்பம் :-

- எல்லை தாண்டிய பணப் பரிவர்த்தனைகளுக்காக, இந்திய தேசிய பணம் செலுத்துகை ஆணையம் (என்ஐபிஎல்), மலேசியாவின் பேநெட்' தளம் இடையிலான ஒப்பந்தம் கையொப்பமானது. இதன்மூலம் மலேசியாவில் இந்தியர்கள் யுபிஐ சேவையைப் பயன்படுத்த முடியும்.
- செமிகண்டக்டர் துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, ஊழல் தடுப்பு, சர்வதேச புலிகள் கூட்டமைப்பு, தொழில்முறை கல்வி மற்றும் பயிற்சி, சுகாதாரம்-மருந்துகள் உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் மொத்தம் 11 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

(v) மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் மையம்

- இந்திய-மலேசிய பிரதமர்கள் பேச் சுவார்த்தையைத் தொடர்ந்து, 'கோலாலம்பூரில் உள்ள புகழ்பெற்ற மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் மையம் அமைக்கப்படும்; மலேசியாவில் புதிய துணைத் தூதரகம் திறக்கப் mபடும்; இந்தியாவில் கல்விபயிலும் மலேசிய மாணவர்களுக்கு திருவள்ளுவர் பெயரில் உதவித் தொகை வழங்கப்படும்' ஆகிய முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

2.ஜப்பான் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் சனே தகாய்ச்சி தலைமையிலான ஆளும் விடுதலை ஜனநாயகக் கட்சி (எல்டிபி) தனிப் பெரும்பான்மையுடன் வரலாற்று வெற்றி பெற்றுள்ளது.

(i) ஜப்பான் நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையில் உள்ள 465 இடங்களுக்கு வாக்குப் பதிவு நடைபெற்றது. 36 ஆண்டுகளுக்குப் பிறகு குளிர்காலத்தில் நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்க பனிப்பொழிவையும் பொருட்படுத்தாமல் வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளைச் செலுத்தினர். இதைத் தொடர்ந்து, வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

(ii) இதில் 316 இடங்களில் எல்டிபி கட்சி வென்றதாக அந்நாட்டு அரசு 'தொலைக் காட்சியில் தெரிவிக்கப்பட்டது.

பெரும் பான்மைக்கு 261 இடங்களில் வெற்றிபெற வேண்டிய நிலையில், மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான இடங்களில் அக்கட்சி வென்றுள்ளது.

(iii) கடந்த 1955-ஆம் ஆண்டு எல்டிபி தொடங்கப்பட்ட நிலையில், 1986-ஆம் ஆண்டு 300 இடங்களில் அக்கட்சி வெற்றி பெற்று சாதனை படைத்தது. தற்போது தனது சொந்த சாதனையை அக்கட்சி முறியடித்து வரலாற்று வெற்றி பெற்றுள்ளது.

(iv) 2024 தேர்தலில் எல்டிபி தலைமையிலான கூட்டணிக்கு குறைந்த அளவே பெரும்பான்மை இருந்தது. பிரதமராகப் பொறுப்பேற்ற ஷிகெரு இஷிபா, உள்கட்சித் தேர்தலுக்குப் பிறகு கட்சித் தலைவர் பொறுப்பையும் பிரதமர் பதவியையும் கடந்த ஆண்டு செப்டம்பரில் ராஜிநாமா செய்தார். இதைத் தொடர்ந்து, கட்சியின் தலைவராக கடந்த அக்டோபரில் பொறுப்பேற்ற தகாய்ச்சி, நாட்டின் முதல் பெண் பிரதமராகப் பதவியேற்றார்.

(v) மக்கள் மத்தியில் கட்சிக்கு இருக்கும் ஆதரவை நிரூபித்து நாடாளுமன்றத்தில் கட்சியை வலுப்படுத்த முன்கூட்டியே அவர் தேர்தலை அறிவித்தார். வாக்குக்கணிப்பு முடிவுகளும் அவருக்கு ஆதரவாகவே இருந்தன. அவரது கூட்டணிக்கு மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை கிடைக்கும் என கூறப்பட்டிருந்தது. சர்வதேச அளவில் வலதுசாரிக் கட்சிகள் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், ஜப்பானிலும் அது தொடர்கிறது.

(vi) சீனாவுடன் பதற்றம் அதிகரித்து வரும் அதே வேளையில், ஜப்பான் பொருளாதாரம் மற்றும் ராணுவத்தை பலப்படுத்துவதையும், அமெரிக்கா உடனான உறவை வலுப்படுத்துவதையும் தகாய்ச்சி முக்கியக் கொள்கையாகக் கொண்டுள்ளார்.

3.சீனா ரகசியமான முறையில் அணுஆயுத சோதனைகளை நடத்தியதாக அமெரிக்காவின் வெளியுறவு துறைக்கான துணை அமைச்சர் தாமஸ் ஜி.டி.நான்னோ குற்றஞ்சாட்டியுள்ளார். கடந்த 2020, ஜூன் 22-இல் இது போன்ற சோதனையை சீனா மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

(i) கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா- சீனா ராணுவ வீரர்களுக்கு இடையே கடந்த 2020, ஜூன் 15-ஆம் தேதி நடைபெற்ற மோதலில் இந்திய ராணுவ வீரர்கள் 20 பேர் உயிரிழந்தனர். சீன தரப்பில் 30 வீரர்கள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

(ii) அமெரிக்கா அமைச்சர் வெளியிட்ட தகவலின்படி, கல்வான் தாக்குதலைத் தொடர்ந்து ஒரு வாரத்துக்குப் பிறகு சீனா அணுஆயுத சோதனையை மேற்கொண்டுள்ளது.

(iii) அமெரிக்கா-ரஷியா அணு ஆயுதங்களை இருப்பு வைப்பதில் கட்டுப்பாடுகள் விதித்து வந்த "நியூ ஸ்டார்ட்' ஒப்பந்தம் கடந்த 2010-இல் கையொப்பமானது. 2021-இல் காலாவதியாக வேண்டிய இந்த ஒப்பந்தம், 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்ட நிலையில், கடந்த வியாழக்கிழமை (பிப்.5) காலாவதியானது.

(iv) அணுஆயுதங்களுக்கு கட்டுப்பாடு விதிப்பதில் ரஷியா மட்டுமல்லாமல் சீனாவையும் உள்ளடக்கிய புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்த அமெரிக்க திட்டமிட்டு வருகிறது. இதனிடையே, சீனா அணுஆயுத சோதனைகள் மேற்கொண்டு வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள அமெரிக்கா, இந்தியாவுடன் நடைபெற்ற மோதலை தொடர்ந்து சீனா அணு ஆயுத சோதனை நடத்தியாக தெரிவித்துள்ளது.

(v) சீனா கண்டனம்:

- அமெரிக்காவின் ரகசிய அணுஆயுத சோதனைகள் குற்றச்சாட்டு தொடர்பாக சீனா நேரடியாகப் பதிலளிக்கவில்லை. இருப்பினும், இதுதொடர்பாக அமெரிக்காவை சீனா கண்டித்துள்ளது.
- இது குறித்து சீன அதிகாரிகள் கூறுகையில், 'போலியான குற்றச்சாட்டுகளை சீனா மீது அமெரிக்கா தெரிவித்து வருகிறது. உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான அணுஆயுதங்கள் அமெரிக்காவிடன் உள்ளது. 2030-ஆம் ஆண்டுக்குள் 1,000-க்கும் அதிகமான அணுஆயுதங்களை சீனா வைத்திருக்கும். அமெரிக்கா மற்றும் ரஷியா உடனான முத்தரப்பு அணுஆயுத கட்டுப்பாடுகள் தொடர்பான பேச்சுவார்த்தையில் பங்கேற்க சீனா விரும்பவில்லை' என்றனர்.

4. சந்தோஷ் கோப்பை - கால்பந்து

டேவிஸ் கோப்பை - டென்னிஸ்

5. வங்கித் துறை சீர்திருத்தத்துக்கான உயர்நிலைக் குழுவை மத்திய அரசு விரைவில் அமைக்கும் என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

(i) அந்தக் குழு வளர்ச்சியடைந்த பாரத இலக்குக்கான நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்த செயல் திட்டத்தை மத்திய அரசுக்கு வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ii) வளர்ச்சியடைந்த பாரத வங்கிகளுக்கான உயர் நிலைக் குழு அமைக்கப்படும் என கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்ட 2026-27-ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் கூறப்பட்டது.

(iii) இது தொடர்பாக பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், வளர்ச்சியடைந்த பாரத இலக்கை அடைவதில் வங்கிகளின் நிதி பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சாமானியர்களுக்கும் வங்கிச் சேவைகள் எளிதில் கிடைக்க வேண்டும்.

(iv) எனவே, வங்கித் துறை சீர்திருத்தத்துக்கான உயர்நிலைக் குழுவை மத்திய அரசு விரைவில் அமைக்கும். அந்தக் குழு மத்திய அரசிடம் செயல் திட்டத்தை சமர்ப்பிக்கும்.

(v) வங்கிகள் அல்லாத பொதுத் துறை நிதி நிறுவனங்களின் செயல்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் எரிசக்தி நிதி கழகம் (பிஎஃப்சி) மற்றும் ஊரக மின்மயமாக்கல் கழகம் (ஆர்இசி) ஆகியவற்றை மறு சீரமைக்கும் முயற்சிகளை சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மேற்கொண்டு வருகின்றன' என்றார்.

(vi) பிஎஃப்சி மற்றும் ஆர்இசி இணைப்புக்கான முன்மொழிவு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, ஆர்இசியை தங்களுடன் இணைப்பதற்கான ஒப்புதலை பிஎஃப்சி அண்மையில் வழங்கியது.

6. அமெரிக்காவுடனான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, இந்தியா ரஷ்ய கச்சா எண்ணெய் கொள்முதலை கணிசமாக குறைத்து வருகிறது.

(i) தற்போதைய கொள்முதல் போக்குகள்

- இந்தியாவின் ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதி, மே 2023-ல் ஒரு நாளைக்கு 21 லட்சம் பீப்பாய்கள் என்ற உச்ச நிலையிலிருந்து, ஜனவரி 2026-ல் 11 லட்சம் பீப்பாய்களாகக் குறைந்துள்ளது.
- புதிய இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, வரும் மாதங்களில் கொள்முதல் ஒரு நாளைக்கு 10 லட்சம் பீப்பாய்களாக மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) இந்த மாற்றத்திற்கான காரணிகள்

- அமெரிக்காவுடன் ஒரு இடைக்கால இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது ஒரு முக்கிய காரணியாகும்; இதன் கீழ், இந்தியப் பொருட்களுக்கான இறக்குமதி வரிகளை அமெரிக்கா 50% இலிருந்து 18% ஆகக் குறைத்துள்ளது.
- முன்னதாக, ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதற்காக இந்தியா மீது அமெரிக்கா கூடுதலாக 25% வரி விதித்திருந்தது; புதிய வர்த்தக ஏற்பாட்டின் ஒரு பகுதியாக இந்த அபராதம் நீக்கப்பட்டுள்ளது.
- பிரதமர் மோடி ரஷ்ய எண்ணெயிலிருந்து அமெரிக்கா மற்றும் வெனிசுலாவிலிருந்து இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டதாக கூறப்படுகிறது.
- ரோஸ்நெஃப்ட் மற்றும் லுகோயில் போன்ற முக்கிய ரஷ்ய எண்ணெய் நிறுவனங்கள் மீதான அமெரிக்கத் தடைகள் இந்திய நிறுவனங்கள் வர்த்தகத்தைத் தொடர்வதை மேலும் கடினமாக்கியுள்ளன..

(iii) இந்திய சுத்திகரிப்பு நிலையங்களின் நிலை

- எந்தவொரு அதிகாரப்பூர்வ உத்தரவும் பிறப்பிக்கப்படாத நிலையில், ரஷ்ய கச்சா எண்ணெயைச் சார்ந்திருப்பதைக் குறைக்குமாறு இந்திய சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.
- கொள்முதலை நிறுத்திய நிறுவனங்கள்: ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் (HPCL), மங்களூர் சுத்திகரிப்பு நிலையம் (MRPL), மற்றும் HPCL-மிட்டல் எனர்ஜி ஆகியவை ஏற்கனவே ரஷ்ய எண்ணெய் வாங்குவதை நிறுத்திவிட்டன.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், அதன் தற்போதைய ஒப்பந்தங்கள் (மொத்தம் 1.50 லட்சம் குவிண்டால்) நிறைவேற்றப்பட்டவுடன் புதிய ஆர்டர்களை வழங்காது என்று அறிவித்துள்ளது.
- இந்தியன் ஆயில் மற்றும் பாரத் பெட்ரோலியம் ஆகியவை எதிர்காலத்தில் தங்கள் கொள்முதலை கணிசமாகக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. புதிய வருமான வரிச் சட்டத்தின் கீழ், வரைவு விதிமுறைகள் மற்றும் வருமான வரிப் படிவங்கள் குறித்து பொதுமக்களிடம் மத்திய நேரடி வரிகள் வாரியம் (சிபிடிடி) கருத்து கோரியுள்ளது.

(i)1961-ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்துக்கு மாற்றாக புதிய வருமான வரிச் சட்டம்-2025 வரும் ஏப்.1 முதல் அமல்படுத்தப்பட உள்ளது.

(ii) 1961-ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டம் புரிந்துகொள்ள கடினமாக இருந்ததுடன், அதனால் நேரடி வரி நிர்வாகத் திறனிலும் இடையூறு ஏற்பட்டது.

(iii) இதைக் கருத்தில் கொண்டு, வருமான வரிச் சட்டம் 2025-ஐ மத்திய அரசு இயற்றியது. இது நேரடி வரி சட்டங்களை எளிமையாகப் புரிந்துகொள்ள வழி வகுத்துள்ளதாகவும், வரி தொடர்பான விஷயங்களை பலவிதமாக அர்த்தம் கொள்வது நீக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(iv) எளிமைப்படுத்தப்பட்ட வருமான வரி விதிமுறைகள் மற்றும் வருமான வரிப் படிவங்கள் குறித்து விரைவில் தெரியப்படுத்தப்படும் என்றும், சாதாரண மக்களும் சிரமமின்றி புரிந்துகொள்ளும் வகையில், அந்தப்படிவங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்தது.

8. அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் (சுமார் ரூ.45 லட்சம் கோடி) மதிப்பிலான பொருள்களை கொள்முதல் செய்வது சாத்தியம் என மத்திய வர்த்த கத்துறை அமைச்சர் பியூஷ்கோயல் தெரிவித்தார்.

(i) மேலும், 30 டிரில்லியன் டாலர் இலக்கை நோக்கிப் பயணிக்கும் இந்திய பொருளாதாரத்துக்கு இது பிரச்னையல்ல னையல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

(ii) இருதரப்பு வர்த்த கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஏராளமான பொருள்கள் மீதான இறக்குமதி வரியை இருநாடுகளும் குறைக்க உள்ளன. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதித்த 50 சதவீத கூடுதல் வரியை 18 சதவீதமாக அமெரிக்கா குறைக்க உள்ளது.

(iii) அமெரிக்காவிடமிருந்து அடுத்த 5 ஆண்டுகளில் 500 பில்லியன் டாலர் (ரூ.45,28,822 கோடி) மதிப்பிலான விமானம், விமான பாகங்கள், மதிப்புமிக்க உலோகங்கள், தொழில்நுட்பம் உள்ளிட்ட பொருள்களை இந்தியா வாங்கத் திட்டமிட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மார்ச் மாதத்தில் கையொப்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) பிற நாடுகளைவிட குறைவான வரி:

சீனா (35 சதவீதம்), தாய்லாந்து (19 சதவீதம்), மியான்மர் (40 சதவீதம்), கம்போடியா (19 சதவீதம்), வங்கதேசம் (20 சதவீதம்), இந்தோனேசியா (19 சதவீதம்), பிரேஸில் (50 சதவீதம்) மற்றும் வியத்நாம் (20 சதவீதம்) ஆகிய நாடுகளை விட இந்திய பொருள்கள் மீது அமெரிக்க இறக்குமதி வரி மிகவும் குறைவு. இதனால் நமது நாட்டின் ஜவுளி, தோல் பொருள்கள், காலணிகள், கைவினைப் பொருள்கள், ரசாயனங்கள், ஆபரணங்கள் போன்ற பொருள்களுக்கு அமெரிக்க சந்தையில் தேவை அதிகரிக்கும்.

(v) தொழிற் சங்கங்கள் வரவேற்பு:

- இந்த ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா சுங்க வரியை குறைத்துள்ளது. ஆனால் அமெரிக்கா பரஸ்பர வரி விதிப்பை மட்டுமே குறைத்துள்ளது என குற்றஞ்சாட்டுபவர்களுக்கு சர்வதேச வர்த்தகம் குறித்த புரிதல் இல்லை. அவர்கள் மக்களை தவறாக திசைதிருப்ப முயல்கின்றனர்.
- ஒப்பந்தத்தின் அம்சங்களை வணிகர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் வரவேற்றுள்ளன.

(vi) விவசாயிகளுக்கு நலன்:

- ஒவ்வொரு ஆண்டும் 55 பில்லியன் டாலர் (ரூ.5 லட்சம் கோடி) மதிப்பிலான வேளாண் மற்றும் கடல் உணவுப் பொருள்களை நாம் ஏற்றுமதி செய்கிறோம். உலகளவில் வேளாண் பொருள்களை அதிகம் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் விவசாயிகளுக்கு செல்வதால் அவர்களின் வருமானம் பன் மடங்கு உயர்கிறது.
- இந்தியாவில் கால்நாடை வளர்ப்புத் துறையில் அதிக ஊட்டசத்தைக் கொண்ட சாறு பிரிக்கப்பட்டு உலர்த்தப்பட்ட தானியங்களுக்கான தேவை அதிகம் இருப்பதால் அதற்கு இறக்குமதி சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(vii) முதலீடுகளை ஈர்க்கும் துறைகள்:

- இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக பெரும் தொழில்நுட்ப நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இதனால் 10 ஜிகாவாட் தரவு மையங்களுக்கு தேவைப்படும் சாதனங்களை அமெரிக்கா விநியோகிக்கும். போயிங் விமானங்கள் மற்றும் விமான பாகங்கள் மட்டுமே அடுத்த 5 ஆண்டுகளில் 80 முதல் 90 பில்லியன் டாலர்கள் வரை கொள்முதல் செய்யப்படுகிறது.
- எனவே, விமான போக்குவரத்து துறையில் மட்டும் குறைந்தபட்சம் ரூ.100 பில்லியன் டாலர்கள் வர்த்தகத்தை அமெரிக்காவுடன் மேற்கொள்ளவுள்ளோம். இதுதவிர கச்சா எண்ணெய், திரவ இயற்கை எரிவாயு, சமையல் எரிவாயு ஆகிய துறைகளும் உள்ளன.

(viii) 500 பில்லியன் டாலர் வர்த் தகம் சாத்தியம்:

- தற்போது உலக அளவில் பல்வேறு நாடுகளிடம் இருந்து 300 பில்லியன் டாலர் (ரூ.27.1 லட்சம் கோடி) மதிப்பிலான பொருள்களை இறக்குமதி செய்கிறோம். அடுத்த 5 ஆண்டுகளில் இதன் மதிப்பு 2 டிரில்லியன் டாலராக உயரும். உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா உள்ளதால் இங்கு செமிகண்டக்டர் சிப், தரவு மையம், விமானங்கள் மற்றும் விமான பாகங்களுக்கான தேவை அதிகரிக்கும்.
- ஆண்டுக்கு தற்போது 45 பில்லியன் முதல் 50 பில்லியன் மதிப்பில் அமெரிக்க பொருள்களை இந்தியா இறக்குமதி செய்து வருகிறது.
- 30 டிரில்லியன் டாலர் இலக்கை நோக்கி பயணிக்கும் இந்திய பொருளாதாரமானது ஆண்டுக்கு 100 பில்லியன் டாலர் என அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருள்களை கொள்முதல் செய்வது சாத்தியம் என்றார்.

9. இந்தியா-மலேசியா உறவுகள் - பிப்ரவரி 2026-ல் பிரதமர் நரேந்திர மோடியின் கோலாலம்பூருக்கான உயர்மட்டப் பயணம்.

(i) வரலாற்று மற்றும் கலாச்சார அடித்தளங்கள்

- இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு, ஆழமான வரலாற்று, அரசியல் மற்றும் கலாச்சாரத் தொடர்புகளின் அடிப்படையில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது.
- 30 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளியினர் மலேசியாவில் வசிக்கின்றனர், அங்கு தமிழ் கலாச்சாரம் ஆழமாக வேரூன்றியுள்ளது, மேலும் பத்து குகைகள் போன்ற ஆன்மீக மையங்கள் பெரும் கூட்டத்தை ஈர்க்கின்றன.

- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது, 1990-களின் "கிழக்கு நோக்குக் கொள்கை"யிலிருந்து, மலேசியா போன்ற தென்கிழக்கு ஆசிய அண்டை நாடுகளுடன் தீவிரமான ஈடுபாட்டிற்கு முன்னுரிமை அளிக்கும் தற்போதைய "கிழக்குச் செயல் கொள்கை"யாகப் பரிணமித்துள்ளது.

(ii) பொருளாதார மற்றும் நிதிசார்ந்த திருப்புமுனைகள்

- அமெரிக்க டாலரைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் ஒரு முக்கிய மாற்றமாக, இரு நாடுகளும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்கு இந்திய ரூபாயையும் மலேசிய ரிங்கிட்டையும் பயன்படுத்த ஒப்புக்கொண்டன.
- இந்தியாவின் NPCI மற்றும் மலேசியாவின் "பேநெட்" ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு ஒப்பந்தம், இந்தியர்கள் மலேசியாவில் எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு UPI சேவைகளைப் பயன்படுத்த அனுமதிக்கும்.
- இருதரப்பு வர்த்தகம் ஏற்கனவே 18 பில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளது, மேலும் இந்தப் பயணம் அனைத்துத் துறைகளிலும் இந்த எண்ணிக்கையை கணிசமாக உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) முக்கிய ஒப்பந்தங்கள் மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு

- குறைக்கடத்திகள், பாதுகாப்பு, கடல்சார் ஒத்துழைப்பு, செயற்கை நுண்ணறிவு மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற முக்கியப் பகுதிகளை உள்ளடக்கி மொத்தம் 11 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.
- இரு நாடுகளும் அனைத்து வகையான பயங்கரவாதத்தையும் கண்டித்து ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டன, மேலும் உளவுத் தகவல்களைப் பகிர்ந்துகொள்வது மற்றும் கடல்சார் பாதுகாப்பில் ஒத்துழைப்பை வலுப்படுத்த ஒப்புக்கொண்டன.
- ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராக ஆவதற்கு மலேசியா அதிகாரப்பூர்வமாக தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

(iv) கல்வி மற்றும் கலாச்சார முயற்சிகள்

- தமிழ் பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்காக கோலாலம்பூரில் உள்ள புகழ்பெற்ற மலாயா பல்கலைக்கழகத்தில் ஒரு புதிய திருவள்ளுவர் மையம் நிறுவப்படும்.
- இந்தியாவில் உயர்கல்வி கற்க விரும்பும் மலேசிய மாணவர்களுக்காக இந்திய அரசாங்கம் பிரத்யேகமாக திருவள்ளுவர் கல்வி உதவித்தொகையை அறிவித்துள்ளது.
- பெரிய இந்திய சமூகத்திற்குச் சிறப்பாகச் சேவை செய்வதற்கும், தூதரகத் தொடர்பை மேம்படுத்துவதற்கும், இந்தியா மலேசியாவில் ஒரு புதிய துணைத் தூதரகத்தைத் திறக்கும்.

(v) மூலோபாய சுதந்திரம்

- மலேசியா ஒரு கொள்கை அடிப்படையிலான இராஜதந்திர நிலைப்பாட்டைப் பேணி வருகிறது; சமீபத்தில் இந்தியாவை விமர்சிக்க வேண்டும் என்ற பாகிஸ்தானின் அழுத்தத்தை நிராகரித்து, சர்வதேச இராஜதந்திரத்தில் மதம் சார்ந்த அணுகுமுறையைத் தாங்கள் ஏற்கவில்லை என்று கூறியுள்ளது.

10. சீனாவின் வரவிருக்கும் சவால் - உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம், விரைவான வளர்ச்சிப் காலத்திலிருந்து ஒரு கடுமையான மக்கள்தொகை நெருக்கடிக்கு மாறிக்கொண்டிருக்கிறது.

(i) உலக மற்றும் பொருளாதார நிலை

- சீனா தற்போது அமெரிக்காவிற்குப் பிறகு உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது.
- இது சுமார் 96 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட, நிலப்பரப்பின் அடிப்படையில் மூன்றாவது பெரிய நாடாகும்.
- இயற்கை வளங்களில் சீனா உலக அளவில் ஐந்தாவது இடத்தில் உள்ளது மற்றும் அரிய வகை கனிமங்கள்

மீது ஏறக்குறைய முழுமையான ஆதிக்கத்தைக் கொண்டுள்ளது, உலகளாவிய விநியோகத்தில் 60% முதல் 90% வரை கட்டுப்படுத்துகிறது.
- சீனா வரலாற்று ரீதியாக தனது பிரம்மாண்டமான மக்கள்தொகையை ஒரு மூலோபாயச் சொத்தாகப் பயன்படுத்தியது, குறிப்பாக 21,196 கி.மீ நீளமுள்ள சீனப் பெருஞ்சுவரைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியது.

(ii) மக்கள்தொகை சரிவு ("சீனாவின் பெரும் துயரம்")

- வெள்ளப்பெருக்கு காரணமாக மஞ்சள் நதி வரலாற்று ரீதியாக "சீனாவின் துயரம்" என்று அழைக்கப்பட்டாலும், குறைந்து வரும் மக்கள்தொகை இப்போது நாட்டின் "பெரும் துயரம்" என்று கருதப்படுகிறது.
- 2025-ல், சீனாவில் பிறப்பு விகிதம் 5.63% ஆகப் பதிவாகியுள்ளது, இது 1949-ல் மா சேதுங் தலைமையிலான புரட்சிக்குப் பிறகு மிகக் குறைந்த அளவாகும்.
- 2025-ல், 79.2 லட்சம் குழந்தைகள் மட்டுமே பிறந்தன, இது 2024-ஐ விட 17% குறைவு (16.2 லட்சம் பிறப்புகள் குறைவு).
- தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக, சீனாவின் மொத்த மக்கள்தொகை குறைந்து, 2025-ல் 140.4 கோடியாக உள்ளது.

(iii) சீனா மற்றும் இந்தியா: கணிப்புகள்

- இந்தியாவின் முன்னிலை: 2023-ல் 143 கோடி மக்களுடன் இந்தியா, உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக சீனாவை முந்தியது.
- 2054-ல் இந்தியாவின் மக்கள்தொகை 169 கோடியாக உச்சத்தை அடையும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில், அதே ஆண்டில் சீனாவின் மக்கள்தொகை 121 கோடியாகக் குறைந்து, நூற்றாண்டின் இறுதியில் (2100) 63.3 கோடியாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) முதுமை நெருக்கடி

- தற்போதைய புள்ளிவிவரங்கள்: தற்போது சுமார் 32.3 கோடி மக்கள், அதாவது மொத்த மக்கள்தொகையில் 23% 60-வயதுக்கு மேற்பட்டவர்களாக உள்ளனர்.
- 2035-க்குள், இந்த மக்கள்தொகைக் குழு 40 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதாவது சீனாவின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் முதிய குடிமக்களாக இருப்பார்கள். * பொருளாதார வல்லுநர்கள் சீனா "செல்வந்த நாடாவதற்கு முன்பே வயதாகி வருகிறது" என்று எச்சரிக்கின்றனர். அதாவது, அந்நாட்டின் மக்கள் தொகையை ஆதரிப்பதற்குத் தேவையான பரவலான செல்வத்தை அடைவதற்கு முன்பே, அதன் மக்கள் தொகை வேகமாக முதுமையடைந்து வருகிறது.

(v) பொருளாதார மற்றும் சமூக விளைவுகள்

- இளம் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவது உற்பத்திச் சங்கிலிகளை சீர்குலைத்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தைக் குறைக்கிறது. இது 2025-ல் 5% ஆக இருந்ததுடன், மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- குறைந்த தொழிலாளர் சக்தி என்பது குறைந்த வரி வருவாயைக் குறிக்கிறது, இது முதியோருக்கான ஓய்வூதியம் மற்றும் சுகாதாரப் பராமரிப்புக்கு நிதியளிக்கும் அரசாங்கத்தின் திறனில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.
- இளைஞர்களின் எண்ணிக்கை குறைவது புதிய யோசனைகளின் குறைவு, பள்ளிகள்/பல்கலைக்கழகங்கள் மூடப்படுதல் மற்றும் முக்கியத் துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது.

(vi) கொள்கை நடவடிக்கைகள் மற்றும் வரம்புகள்

- *பிறப்புகளை ஊக்குவிக்க, அரசு நேரடி ரொக்க ஊக்கத்தொகைகள், வரிச் சலுகைகள், திருமண சேவைகள் மற்றும் கல்வி மற்றும் வீட்டுவசதிக்கான மானியங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.*
- *மனித உழைப்பிற்குப் பதிலாக STEM கல்வி மற்றும் உயர் தொழில்நுட்ப தானியக்கமயமாக்கலை (செயற்கை நுண்ணறிவு/ரோபோக்கள்) சீனா தீவிரமாகப் பின்பற்றி வருகிறது; இருப்பினும், இது ஒரு சுழற்சியை உருவாக்குகிறது, இதில் சீனாவின் வளர்ச்சிக்கு மூல காரணமாக இருந்த மனிதத் தொழிலாளர்கள் முற்றிலும் படிப்படியாக அகற்றப்படுகிறார்கள்.*

*சீனாவின் மக்கள்தொகைச் சிக்கல், இந்தியா மற்றும் ஐரோப்பா உட்பட மற்ற உலக வல்லரசுகளுக்கு, பிறப்பு விகிதங்கள் குறைவதால் ஏற்படும் நீண்டகால அபாயங்கள் குறித்த ஒரு கடுமையான எச்சரிக்கையாக அமைகிறது.*